

தமிழ் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடும் விதமாக

# மெட்ரோ ரெயிலில் கலை நிகழ்ச்சிகள்

சென்னை, பிப்.1-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் தமிழ் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடும் விதமாக பல்வேறு இசை கலைஞர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து சென்னை கலைத் தெரு விழா நடத்தி வருகிறது.

இந்த கலைத் திருவிழாவில் நடனம், இசை உள்ளிட்ட பல்வேறு தொடர் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

இந்தநிலையில் நேற்று முன்தினமும் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையுத்தில் இருந்து சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையம்வரை இயக்கப்பட்ட மெட்ரோ ரெயிலிலும், சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்திலும் பரத நாட்டியம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இதேபோல நாளை (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.30 மணி முதல் 8.30 மணி வரை சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

மேற்கண்ட தகவல் அனைத்தும் மெட்ரோ ரெயில் நிர்வாகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.